கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்

Coventry Tamil Welfare Association


http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

மார்கழி மாத இதழ்
NEWS BULLETIN
DECEMBER 2022
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
	புதிய கட்டடத் தொகுதியில் எமது தமிழ்ப் பாடசாலை மற்றும் கலைப் பாடங்கள் நடைபெற்று வருகின்றன. பாடசாலையின் முகவரி: Clifford House, 38-44, Binley Road, Coventry CV3 1JA.

SATURDAY	TIME
Tamil	9.50am-12.30pm
Vocal	1pm-4pm
Keyboard/Violin	1pm-4pm
Karate	12.30pm-1.30pm

SUNDAY	TIME
Bharathanatiyam (Sathya Teacher)	10am-2pm
Bharathanatiyam (Ajantha Teacher)	1pm-4pm
Vocal	10am-2pm
Keyboard	10am-2pm
Violin/ Veena	10am-2pm
Miruthangam	1pm-4pm
Tamil	10am-12noon



07/01/23	தமிழ்ப் பாடசாலை ஆரம்பம்

ஒளிவிழா



கிறிஸ்துமஸ் தினத்தை முன்னிட்டு, எமது தமிழ்ப் பாடசாலையில் ஒளிவிழா 17/12/2022 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தமிழ்ப்பாட இணைப்பாளரும், தமிழ் ஆசிரியையுமான திருமதி ரஜனி ஜோன்சன் அவர்களின் தலைமையிலும், மூத்த தமிழாசிரியை திருமதி அனற்செபமலர் கிருஷ்ணதாஸ், சுரத்தட்டு ஆசிரியையும், பழைய மாணவியுமான செல்வி ஸ்ரேஃபனி லோரன்ஸ் ஆகியோரும் இணைந்து நிகழ்வுகளைத் திறம்பட நடாத்தியிருந்தனர்.



வரவேற்புரையினை தமிழாசிரியை திருமதி அனற்செபமலர் கிருஷ்ணதாஸ் அவர்களும், தலைமையுரையினை கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் மதிப்பிற்குரிய சிவத்தமிழ் காவலன் திரு கந்தையா அரியரட்ணம் அவர்களும் நிகழ்த்த, வாழ்த்துரையினை கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் வெளியுறவு அலுவலர் திரு கணேசையா பிரசாத் ஐயா வழங்கினார்.



மாணவச் செல்வங்களின் கலைநிகழ்வுகளான பாடல், பேச்சு, கவிதை, நடனம், நாடகம், அபிநய நடனம் என்பவற்றோடு, ஆசிரியர்கள், நிர்வாக உறுப்பினர்கள் இணைந்து வழங்கிய வில்லிசை என ஒளிவிழா களை கட்டியிருந்தது. இறுதியில் நன்றியுரையினை கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் திரு ஸ்ரீநாதன் பகீரதன் நிகழ்த்தியிருந்தார்.





சின்னஞ்சிறு மழலைகள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த நத்தார்த் தாத்தாவின் வருகை எல்லோரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியதோடு ஆடிப்பாடியும் மகிழ்ந்தனர். இந்நிகழ்வுகள் முகப்புத்தகத்தினூடாக நேரலையிலும், மறு அறையில் திரையிலும் காட்சிப்படுத்தப்பட்டன. சிற்றுண்டிகள், தேநீர் என்பன வழங்கி, பெற்றோர்கள், மாணவர்கள் மகிழ ஒளிவிழா இனிதே நிறைவு பெற்றது.



ஈழத்துப் புலமைகள் (பாகம் 9)

கடந்த இதழிலே!!
மன்னன் பரராச சேகரனின் தம்பி இளவல் செகராசசேகரன் தமிழ்ப் புலவர்களை வரவழைத்தும் தமிழ்ச் சங்கத்தினை மீளக்கட்டமைத்தும், தமிழ்ப்பாடசாலைகளை நிறுவியும் தமிழ் வளர்த்ததைப் பார்த்தோம்;

இவ்விதழிலே,,,
அரசகேசரி புலவர்;

யாழ்ப்பாண இராச்சியத்தையாண்ட மன்னன் பரராசசேகரனின் மருமகனாவார். ஆனால் சில ஆய்வாளர்களின் கருத்துப்படி மன்னன் பரராசசேகரனைப்பற்றி மாறுபட்ட விம்பங்களே கிடைக்கின்றன. தமிழறிஞர் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் எழுதிய "யாழ்ப்பாண சரித்திரம்" எனும் நூலை நோக்குங்கால்: பரராசசேகரன் - "ஜயவீரசிங்கை ஆரியன்" என்ற பட்டம்பெற்ற பாண்டிய மரபில் கி.பி 1260 பிறந்தவன் எனக்குறிப்பிடுகிறார்.

ஆனால்;
சோம ஐயர் அவர்களால் எழுதப்பட்ட "செகராச சேகரமாலை" எனும் சோதிட நூலில், இராமபிரான் தான் தாபித்த இராமேஸ்வரரை பூசை வழிபாடுகள் இயற்றும்படி பாசுபதர்களாகிய பஞ்சக்கிராம வேதியர் ஐஞ்ஞூற்றுப் பன்னிருவரை அழைத்து:

"பூசனை செய்மீரெனக் கருணை
புரிந்தவர் தங்களிலிருவர்
காசினி தாங்கும் படிவரங்கொடுத்துக்
கமழ்செழுந்துளபமா லிகையும்
மாசறு சுருதி யாரிய வேந்தென்
றணிமணிப் பட்டமுங்கொடுத்து
தேசுறு குடையுமொற்றையும் வெற்றித்
திகழ்விடைத் துவசமு நல்க"

ஆகவே சதுர்முக நாலாற்றில் புவியாண்ட அரசர் குலத்தில் பிறந்தவனாக கூறப்படுகிறது. ஆக பரராசசேகரனின் வரலாறு மீளவ்வுக்குரியதென்க;
வடமொழியில் மகாகவி காளிதாசன் எழுதிய "இரகு வம்சம்" என்ற காவியத்தைத் தமிழ் மொழியில் பெயர்த்தமை அவரது இருமொழியறிவை நன்கு புலப்படுத்துமென்பர் மொழியியல் ஆய்வாளர்கள் .

வடமொழி இரகு வம்சத்தில் வரும் :

"ஸராஜ்யம் குருணாதத்தம் பிரத்தியாதிகம் பபென
தினாந்தெ நிஹிதம் தேஜஸ் சவித்திறே வ்ஹஊ'

எனும் சுலோகத்தை, தமிழ் இரகுவம்சத்தில் -

"கனைகழல் வீரனுங் காவலான்றரு
புனைமணிமுடியொடும் பொலிந்து தோன்றினான்
றினகரன் றிவாந்தகா லத்திற் சேர்த்திய
வினவொளி கொடுகண லிலங்கிற் றென்னவே"

என மொழிபயர்த்தமையின் அறிஞர் புகழ்ந்தனர். அரசகேசரிப் புலவர் இரகுவம்சத்தைத் தமிழில் பாடும்போது, நல்லூரிற்குக் கிழக்கே உள்ள "நாயன்மார் கட்டு' எனுமிடத்தே அமைந்துள்ள "தாமரைக்குளத்தருகே இருந்தே பாடியதாக கூறுவர். அதனல்தான் குளத்தருகேயுள்ள வயல்களையும், கமுகு, கரும்பு முதலான பயிர்களையும் நாட்டுப் படலத்தில் வருணிப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

"கூறுவேழத்த னரம்பையின் வளைந்தன கதிர்களூறு செய்திடத் தொடுத்தகூன் குயமொத்தவேனும் பாறு நெட்டிலைப் பூகமேல் வீழ்ந்தன பழுக்காய்த்தாறு வேறிடக் கொளீஇயன் தோட்டியிற் றங்கும்"

என்பதனால் அறியலாம். நல்லூர், யமுனா ஏரிக்கு அருகேயுள்ள "அரச கேசரி வளவு" இவரது வாழ்விடமாகும். இவரது செயுள்கள் மிகக்கடினமான சொற்பிரயோகங்களுக்கூடாக உருவாக்கப்பட்டமையினால் கற்றோர்க்கே கடினமானதாக கூறப்படுகிறது.

"அரிமுக மடுத்து வீழு மான்மத வளறு நாறாக் காரிமுக வோடமூர்ந்து சிலதியர்மருங்கு காப்பச் சுரிமுக நெற்றி சுற்றச் சுடர் மணி வர்க்கந்தொக்க பரிமுக வோட மூர்ந்துசிலதியர் மருங்கு போனார்"
எனும் இவரது செய்யுள் ,சிலப்பதிகாரத்தில் வரும்-

"பரிமுக வம்பியும் கரிமுக வம்பியும்
அரிமுக வம்பியு மருந்துறை யியக்கும்
பெருந்துறை மருங்கில்"
(அம்பி என்பது கடற்கலத்தைக் குறிக்கும்)

எனும் இளங்கோவடிகளின் செய்யுளின் சாயலாக கணப்படுகிறது. ஆக இவர் இராமாயணம், சிலப்பதிகாரம், அகநானூறு போன்ற காப்பியங்களில் தேர்ச்சி பெற்றவர் எனக்கொள்ளலாம்.

(தொடரும்)

ஆக்கம்
ஆசிரியர் திரு மாணிக்கம் தவதுரை
Master Knowledge Educational Services

